**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 01.09.2025</u>**

**OS.36/2020**

**வா.சா.1 திருமதி.கற்பகம்**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>1,3,4,5,6,8,9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனது தாயார் பெயர் வள்ளியம்மாள் என்றால் சரிதான். எனது தாயார் தொட்டம்பட்டி கிராமத்தில் ஊரில் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவர் வசித்து வந்த வீடு ஓட்டுவீடா, அல்லது கூரை வீடா என்றால் கூரைவீடு. எனது தாயார் வள்ளியம்மாளுடன் சுமூகமான முறையில் பேச்சு வார்த்தை உள்ளது என்றால் சரிதான். எனது தாயாருக்கான இடப்பத்திரம் எனது தாயார் பெயரில் தான் பத்திரம் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது, எனது அம்மாவிற்கு தான் தெரியும். எனது அம்மாவிற்கு பிளாட்டாக இடம் உள்ளது என்றால் சரிதான். அதன் மதிப்பு தற்போது 50 இலட்சத்திற்கு மேல் இருக்கும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்தை வீடு கட்டி எனது அம்மா உயிருடன் இருந்தபோது எனது அம்மா கடன் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. 8ம் பிரதிவாதி அங்கமுத்துவை எதற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் அது தாவா சொத்தில் உள்ள பள்ளியை விலைக்கு வாங்கியவர் அதனால் அவரை இந்த வழக்கில்சேர்த்துள்ளேன். அந்த பள்ளியின் பெயர் ஸ்ரீ விஜயவித்யாலயா மெட்ரிக் பள்ளி என்றால் சரிதான்.

மேற்படி ஸ்ரீ விஜயவித்யாலயா மெட்ரிக் பள்ளி நான் தாவா தாக்கல் செய்த 2020 க்கு முன்பே கட்டிவிட்டார்கள் என்றால் சரிதான், அது கட்டியது நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 10 வருடத்திற்கு முன்பாகும். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில், சொத்து விவரத்தில், மேற்படி ஸ்ரீ விஜயவித்யாலயா மெட்ரிக் பள்ளி உள்ளது, கட்டிடங்கள் உள்ளது என்ற விவரத்தை எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்தபோது மேற்படி ஸ்ரீ விஜயவித்யாலயா மெட்ரிக் பள்ளி கட்டிடத்தின் மதிப்பு 30 கோடிக்கு மேல் இருக்கும் என்றால் இருக்கலாம்.

3. 8ம் பிரதிவாதி அவர் வாங்கிய சொத்தை நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 20 நபர்களுக்கு மேல் அதனை கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்தை பொறுத்து வில்லங்க சான்றிதழ் பெற்று பார்த்தேன் என்றால் அது ஞாபகம் இல்லை, அங்கமுத்து சொத்தை பொறுத்து மட்டும் பார்த்தேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 கணினி சிட்டா படி அதன் உரிமையாளர்கள் என 10 நபர்களுக்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எல்லாம் எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.10 ன் படி உரிமையாளர்களாக சொல்லப்பட்டுள்ள அனைவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

4. எனது தாயார் வள்ளியம்மாள் ரவி என்பவருடன் கிரைய உடன்படிக்கை ஆவணம் 2013 ம் ஆண்டில் ஏற்பட்ட பாகப்பிரிவினை

அனுசரித்து செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது எனது அம்மாவை கேட்டால் தான் தெரியும். எனது தாயார் வள்ளியம்மாள் ரவி என்பவருடன் ஒப்பந்த பத்திரம் எழுதிய 2014 ம் ஆண்டிலேயே எனக்கு மேற்படி ஒப்பந்தம் குறித்தும், பாகபாத்தியம் விடுதலைபத்திரம் குறித்தும் எனக்கு நன்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு ஏதும் தெரியாது. எல்லா விவரங்களும் எனக்கு தெரியும் ஆனால் அதனை மறைத்து நான் பொய்யான சங்கதிகளை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. வழக்கு தாக்கல் செய்துள்ள அயிட்டம் 19 ல் உள்ள சொத்தான H.தொட்டம்பட்டி கிராம சர்வே எண்.100/1A புஞ்சை ஹெக்டேர் 0.39.5 என்ற நிலம் சம்பத் என்பவருக்கு சுயமாக பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல, அது எனது அப்பாவிடம் கையெழுத்து பெற்றதற்கு முன்பாகவே அந்த சொத்து வாங்கியிருந்ததால் அந்த சொத்தும் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்து சம்பதிற்கு தனிப்பட்ட சொத்து என்பதால் அவர் 8ம் பிரதிவாதி அங்கமுத்துவிற்கு 2013 ம் ஆண்டு விற்பனை செய்துள்ளார் அந்த விவரமும் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

6. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 10.07.2013 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் தரப்பினராக உள்ள நபர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் அந்த காரணத்திற்காகவே இந்த வழக்கு தள்ளுபடி

செய்யக்கூடியது என்றால் சரியல்ல. தாவாவில் 9ம் பிரதிவாதி குமரேசன் என்பவரை எதற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் எனது அப்பாவின் அம்மாவிற்கு அவர் பெற்றோர்வீட்டில் இருந்து கொடுத்த நிலம் எந்தவித ஆவணமும் நாங்கள் ஏற்படுத்திக்கொடுக்காமல் குமரேசன் பெயரில் இருந்ததால் அந்த நிலத்தையும் சேர்த்துள்ளோம். எனது பாட்டியிடம் அந்த பத்திரத்தில்தான் குமரேசன் கிரையம் பெற்றுள்ளார் அது செல்லாது என்று சொல்லி அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். குமரேசன் பெயரில் உள்ள ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யாததால் அவரை இந்த வழக்கில் தேவையற்ற தரப்பினராக சேர்த்துள்ளேன் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் தக்கல் செய்துள்ள தாவா சொத்து சம்மந்தமாக அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்கள். 195/2014, 1800/2016, 1963/2014, 5695/2014, 1444/2015, 1445/2015, 2769/2017, 4098/2016, 5570/2015, 84/2016, 85/2016, 265/2017 ஆகிய ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எல்லாம் எனக்கு நினைவில்லை. மேற்படி ஆவணத்தின்படி உள்ள தரப்பினர்களை இவ்வழக்கில்தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும் அவ்வாறு சேர்க்காமல் விட்டதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

7. இந்த தாவா சொத்து சம்மந்தமாக ஏற்கனவே எனது தந்தை 1996 ல் பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துவிட்டதாலும், அதன்பின்னிட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை 1999ல்

பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பதிவு செய்து கொண்டுள்ளார்கள், எனது தாயாருக்கு தொட்டம்பட்டி கிராமதில் உள்ள பிளாட் சம்மந்தமாக 2013 ல் பத்திரம் எழுதி கொடுத்துவிட்டதாலும் மேற்படி ஆவணங்களுக்கு பிறகு 1 முதல் 3 பிரதிவாதிகள், 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களில் சிலவற்றை விற்பனை செய்துவிட்டபடியாலும், நான் முறைப்படி உரிய காலவரையறைக்குள் தாக்கல் செய்யாத காரணத்தினாலும், உரிய நபர்களை சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்யாததாலும், 9ம் பிரதிவாதியை தேவையற்று சேர்த்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கு சொத்துக்களின் மதிப்பை குறைத்து இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் வழக்கு சொத்துக்களின் மதிப்பு ரூபாய் 50 கோடிக்கு மேல் இருக்கும் என்பதால் இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கை நடத்த அதிகார வரம்பு இல்லை அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல தாவா சொத்துகள் எப்போதும் கூட்டு சுவாதீனத்தில் இல்லை நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. எனக்கு அச்சல்வாடி கிராமத்தில் பட்டா எண்.751 ல் விவாசய நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான். 3ம் பிரதிவாதி சம்பத் என்பவர் 3ம் பிரதிவாதி சம்பத்தின் மனைவி எனது கணவரின் சகோதரி என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களின் மதிப்பு அதிகரித்து விட்டதால்

பொய்யான சங்கதிகளை சொல்லி துர்லாபம் அடையவேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.01 16:51:03 +0530